# பௌத்தம் குறிப்பிடும் இறுதி இலக்கு
# தேரவாத பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

இ.சகாயசீலன்
ஒப்பீட்டுச்சமயமும் சமூக நல்லுறவும் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

## ஆய்வுச்சுருக்கம்

இந்தியாவில் தோன்றிய பல்வேறு தத்துவப் பிரிவுகளில் பௌத்த தத்துவமும் ஒன்று. இந்தப் பௌத்த தத்துவம் தோற்றம் பெற்று இரண்டாயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது என்பது சரித்திர ஆய்வாளர்கள் கருத்து. இனம், நிலம், மொழி என்ற வேறுபாட்டைக் களைந்து மக்கள் நலம்பெற வேண்டும் என்ற தரும நெறியினைக் கொண்டது பௌத்த தத்துவம். நான், எனது என்னும் செருக்கை அறுத்து, அவாவை நீக்கி, பேதமை அகற்றி, தீயவைக்கு அஞ்சி, எண்ணத்தில் தூய்மை கொண்டு, வினைத்தூய்மையையும் மேற்கொண்டு, அறிவுடையார் தொடர்பில் இணைந்து வாழ ஒருவனை ஊக்குவிப்பதாகவே புத்தரின் தத்துவம் விளங்குகின்றது. பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய துன்பங்களிலிருந்து மனிதன் விடுபட்டு, பேரின்பப் பெருநிலையை எய்தப் புத்தபெருமான் கண்ட வாழ்க்கை நெறியே பௌத்த தத்துவமாகும். சாதி, இன வேற்றுமையின்றி, தகுதி மிக்க சான்றோர்கள் ஏற்றுக்கொண்ட சங்கம், உலகில் நன்நெறிகளைப் பரப்பத்தான் எனப் பௌத்த தரும, சங்கங்கள் கூறுகின்றன. இங்கு ஆரம்பகாலப் பௌத்தக் கோட்பாடாகக் கொள்ளப்படுகின்ற தேரவாத பௌத்தம் குறிப்பிடும் "நிர்வாணம்" (இறுதி இலக்கு) பற்றி ஆராயப்படுகின்றது.

மெய்யியல் தொடர்பான ஆராய்ச்சியில் மனிதவாழ்வின் இறுதி இலக்குத்தொடர்பான ஆராய்வும் மிக முக்கியமானதாகும். அந்த வகையில் எல்லா இந்திய முறைமைகளும் அறிவொளி அல்லது விடுதலை எனும் ஒரே விதமான தோற்றப்பாட்டையே சுட்டிநிற்கின்றன. அந்த விடுதலையானது வெவ்வேறு முறைகளில், வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அது நிர்வாணம், மோட்சம், வீடுபேறு, சுதந்திரம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. இது வெவ்வேறு வழிகளில் விளக்கப்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வழிகளில் விளக்கப்பட்டிருப்பினும், விடுதலை எனும் விடயத்தில் பாரியளவில் ஒத்துப்போகின்றன. மிக முக்கியமான விடயம் என்னவெனில், விடுதலை என்பதைப் புலமை சார்ந்த வகையில் கிரகித்துக்கொள்ளமுடியாது என்பதாகும். எண்ணக்கரு ரீதியாக இதனை விளங்கிக் கொள்ளவோ, அடையவோ முடியாது. விடுதலையடையும் அனுபவமானது ஏனைய அம்சங்களைப்போல் பரிசிலிக்க முடியாதவையாகக் காணப்படும் அதேவேளை, இறுதியில் விடுதலையானது யதார்த்தத்தின் உண்மையான தன்மையினை வெளிப்படுத்துவதாக உள்ளது. பௌத்த தத்துவத்தின் பிரதான பிரச்சினையானது நிர்வாணத்தைப் பற்றியதாகும். ஏனெனில், புத்தர் அதனை உற்றுநோக்குவதை நிராகரித்துவிட்டார். அவருடைய இந்த உளப்பாங்கானது எவ்வாறானதெனில், நிர்வாணத்தைப்பற்றி நீ அறியவேண்டுமானால் நீ நிர்வாணத்தை அடைய வேண்டும் என்பதாகும்.